உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

பெயர் : ஹரினி நித்யானந்தி(அ.சா.9)
தகப்பனார் பெயர் :முருகன்
கணவர் பெயர் :
வயது :28
கிராமம் :மதுரை
வட்டம் :மதுரை
தொழில் :கிரேஸ் கென்னட் மருத்துவமனை, Chief Medical Officer

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

06.11.2025

முதல் விசாரணை:

கடந்த 20.12.2021 அன்று எங்களது மருத்துவமனையில் நதியா என்ற பெண் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு, அது தொடர்பாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 20.12.2021 அன்று மாலை சுமார் 5.20 மணியளவில் எங்களது மருத்துவமனைக்கு 33 வயது மதிக்கத்தக்க நதியா W/o முனிஸ்வரன் என்பவர் சுயநினைவுடன் அவர் தாக்கபட்டு தீக்காயத்துடன் எங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நதியாவிற்கு தீக்காயத்துடன், சூடான எண்ணெய் கழுத்து முன்பகுதியிலும், முதுகு மேல்பகுதியின் இருபுறங்களிலும், இடது முன்கையிலும், பின்கையிலும், வலது பக்க தோள்பகுதி கீழுள்ள கைப்பகுதியிலும், சூடான எண்ணெய் ஊற்றப்பட்டதால் ஏற்படும் தீக்காயங்களுடன் வந்திருந்தார். மேற்படி காயங்கள் எப்போது நடைபெற்றது என்று திவ்யா என்ற மருத்துவர் கேட்டபோது, அவர் தனக்கு 20.12.2021 அன்று நண்பகல் 12.30 மணியளவில் நதியாவின் வீட்டில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறியிருக்கிறார். நதியாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவ குழுவினரோடு நானும் சிகிச்சை அளித்தேனா என்றால் இல்லை. எங்களது மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேட்டில் தீக்காயங்கள் எண்ணெய் ஊற்றப்பட்டதாக மட்டுமே

கூறப்பட்டுள்ளதே தவிர எந்த நபரால் ஊற்றப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை. நேரடியாக தீக்காயங்களுடன் கென்னட் மருத்துவமனைக்கு வந்ததாக தான் உள்ளது, வேறு எங்கும் சிகிச்சை பெற்று வந்ததாக எங்களது மருத்துவ கோப்பில் குறிப்புகள் இல்லை. நதியாவிற்கு ஏற்பட்ட தீக்காயங்கள் 17% பாதிப்புடைய காயங்களாக கணக்கிடப்பட்டது. மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் ஆகும். சாட்சியிடம் காயச்சான்றிதழ் காட்டப்பட்டு, மேற்படி காயச்சான்றிதழானது எங்களுடைய மருத்துவமனையால் வழங்கப்பட்ட ஆவணம் தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காயச்சான்றிதழில் என்ன வகையான காயம் என்பது குறிப்பிட்டு சொல்லப்படாமல் மருத்துவ கருத்துரை வழங்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருப்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் மருத்துவமனையால் மேற்படி நதியாவிற்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டை சாட்சி தாமாக முன்வந்து வழங்கவே மேற்படி ஆவணம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நதியாவிற்கு கழுத்துபகுதியில் தீக்காயங்கள் 1.5% மும், முதுகுபகுதியில் 11% மும், வலதுபுற மேல்கைப்பகுதியில் 3% மும், இடது கைபகுதியில் 1.5% தீக்காயமும் ஏற்பட்டிருப்பதாக காயச்சான்றிதழில் உள்ளது. 15 % த்திற்கு அதிகமான தீக்காயங்கள் இருந்தால் அது கொடுங்காயங்கள் ஆகும். மேலும் கழுத்துபகுதி தீக்காயங்களால் பாதிக்கப்பட்டிருப்பதால் அது கொடுங்காயம் தான். மேற்படி காயமானது சூடான எண்ணெய் அல்லதுழ கொதிக்கும் திரவம் பட்டால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நதியா 19நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டார். 20.12.2021 முதல் 07.01.2022 முடிய உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டார். எங்களது மருத்துவமனையில் சகோதரர் கார்த்திக் என்ற நபர் நதியாவை அழைத்து வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாக குறிப்புகள் உள்ளது. ஸ்விட் லைன் பிரிசில்லா என்பவர் தற்போது

எங்களது மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்ற தகவல் எங்களிடம இல்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நதியாக எங்களது மருத்துவமனையில் வந்து சேரும் போது நன்கு ஆரோக்கியமான நிலையில் இருந்தாரா என்றால் இருந்தார். நதியா தனக்கு ஏற்பட்ட காயங்கள் எங்கு, எப்போது, யாரால் ஏற்பட்டது என்ற விபரத்தை சிகிச்சை அளித்த மருத்துவரிடம் சொல்லிவிட்டார் என்றால் சரிதான். நதியா சொன்ன விபரங்களை எங்களது மருத்துவ குழுவினர் மருத்துவ பதிவேட்டில் அப்படியே பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் சா.சா.ஆ.1ல் மேற்படி சம்பவமானது எந்த இடத்தில் எப்போது நடைபெற்றது என்பதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவமானது வீடு என்று தான் உள்ளது. சா.சா.ஆ.1ஐ பொறுத்தவரை நதியாவின் முகவரி என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3/64A அண்ணாநகர், கோட்டநத்தம்பட்டி, மேலூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சா.சா.ஆ.1ல் மேற்படி சம்பவமானது நதியாவின் வீட்டில் நடந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவமானது முன்பு சொன்ன அண்ணாநகர், கோட்டநத்தம்பட்டி, மேலூர் முகவரியில் நடந்ததாக அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் அதுபற்றி தெரியாது. அ.சா.ஆ.9ல் காயச்சான்றிதழில் மேற்படி சம்பவமானது, 20.12.2021 அன்று 12.30 மணியளவில் அவருடைய முகவரியான 3/64A அண்ணாநகர், கோட்டநத்தம்பட்டி, மேலூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மருத்துவ ஸ்விட் லைன்பிரிசில்லா என்ற மருத்துவ அதிகாரியை காவலர்கள் விசாரணை செய்தார்களா என்ற விபரம் நேரடியாக எனக்கு தெரியாது. காவலர்கள் மேற்படி மருத்துவரை சாட்சியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள் என்று கோப்பில் உள்ளது என்றால் இருக்கலாம். நதியாவிற்கு காயத்தின் தன்மை பற்றிய கருத்துரை எங்களது

மருத்துவமனையால் காயச்சான்றிதழில் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நதியாவிற்கு தீக்காயங்கள் இடது உள்ளங்கை மேல்பகுதியில் உள்ளது. மேற்படி காயமானது, உள்ளங்கை மேல்பகுதியில் சமையல் செய்யும் போது சூடான எண்ணெய் ஊற்றியோ, சூடான தண்ணீர் அல்லது திரவம் ஊற்றியோ ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது. சமையல் செய்யும் போது சில பொருட்களை சூடான எண்ணெயில் போடும் போது எண்ணெய் தெரிக்க வாய்ப்புள்ளது என்றால் உடலின் முன்பகுதியில் வாய்ப்புள்ளது, ஆனால் முதுகுபகுதியில் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. 19 நாட்கள் நதியா உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார். தீப்பட்ட நதியாவிற்கு பழைய நிலையில் அவர் திரும்ப இயலாத நிலைக்கோ, அல்லது உயிர் சேதாரம் ஏற்படுவதற்கோ வாய்ப்பில்லை என்றால் வாய்ப்பு இருக்கிறது. மேற்படி காயத்தினால் நதியா முன்பு செய்த வேலைகளை பின்பு இயல்பாக செய்ய முடியும் என்றால் முடியும்.

மறுவிசாரணை :

காயம்பட்ட நதியாவிற்கு மேற்படி காயத்தினால் வாழ்நாள் முழுவதும்அவர் தன்னுடைய உடம்பிலும், கையிலும் தழும்போடு இருக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதால் அவருக்கு மிகுந்த மனவேதனை இருந்திருக்கும் என்றால் இருக்கலாம்.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.06 22:46:06 +0530

Assistant Sessions Judge

Melur